# DEPOSITON OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | | |
|---|---|---|
| Calender | } | |
| Miscellaneous | } | |
| Preliminary Register | } | |
| Sessions | } | Case No.SC.115/2023 |

| | |
|---|---|
| Deposition of Witness | { PW 2 |
| | { Prosecution |
| | { |

| | |
|---|---|
| Name | : கந்தசாமி |
| Father's Name | : --- |
| Taluk | : --- |
| Calling | : --- |
| Religion | : --- |
| Age | : --- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.09.2023.

2023 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.2 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

முதல் விசாரணை

நான் செட்டிப்பட்டி கப்பரையன் காட்டில் குடியிருக்கிறேன். நான் கட்டிட வேலை செய்கிறேன். அ.சா.1 என் அண்ணன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனக்கு சுதா என்ற மனைவியும், 2 மகள்களும் உள்ளார்கள். ஆஜர் எதிரிகள் எனக்கு சித்தப்பா மக்கள். அவர்களுக்கும் எங்களுக்கும் இடையே நில பிரச்சனை இருந்து வந்தது. சுமார் 5 வருடத்திற்கு முன்பு தேதி, மாதம், வருடம் தெரியாது. அன்று ஞாயிற்று கிழமை காலை சுமார் 9.30 மணிக்கு ஆஜர் எதிரிகள் எங்கள் காட்டில் மண்ணை வெட்டி அள்ளி அவர்களுடைய காட்டிற்குள் கொட்டினார்கள். அதை பார்த்துவிட்டு என் அண்ணன் வெங்கடாசலம், அண்ணி செல்லம்மாள் ஆகியோரும் காட்டிற்கு சென்றார்கள். அவர்கள் பின்னால் நானும் சென்றேன். அப்போது என் அண்ணன் வெங்கடாசலம் எதிரிகளிடம் எதற்காக மண்ணை வெட்டி அள்ளுகிறீர்கள் என்று கேட்டார் அதற்கு 1 ம் எதிரி உனக்கு இங்கு எங்கடா காடு இருக்கிறது தேவடியா பையன், கண்டோரளியா பையன் என்றும் திட்டினார். பின்பு 1 ம் எதிரி கையில் வைத்திருந்த அரிவாளால் என் அண்ணனை இடது

பக்க தோள்பட்டையில் இத்தோடு செத்து போடா என்று வெட்டினார். அதனால் என் அண்ணனுக்கு இடது தோள்பட்டையில் வெட்டு காயம் ஆனது. அப்போது 2 ம் எதிரி என் அண்ணன் நெஞ்சின் மீது ஏறி அமர்ந்து கொண்டார். அந்த சமயத்தில் 1 ம் எதிரி என் அண்ணனின் இரண்டு தொடைகளிலும் வெட்டியும், அறுத்தும் காயத்தை ஏற்படுத்தினார். அதனால் என் அண்ணி என் அண்ணனை காப்பாற்றுவதற்காக ஓடிவந்தார் அப்போது 3 ம் எதிரி என் அண்ணியை தலை முடியை பிடித்து இளுத்து நெஞ்சிலும் முதுகிலும் காலால் எட்டி எட்டி உதைத்தார். அதை பார்த்து விட்டு நானும் கத்தி கொண்டு ஓடி வந்து என் அண்ணனை காப்பாற்ற முயன்ற போது 1 ம் எதிரி என்னிடம் உன்னையும் வெட்டி கொள்ளாமல் விடமாட்டேன் டா என்று சொல்லி எனது இடது தோள்பட்டையில் அதே அரிவாளால் வெட்டினார். பின்பு கழுத்தை வெட்ட வந்த போது நான் குனிந்து கொண்டேன். 1 ம் எதிரி வெட்டியதில் எனக்கு இடது பக்க முதுகில் காயம் ஆனது. 1 ம் எதிரி என்னை மீண்டும் வெட்ட முயன்ற போது நான் அரிவாளை பிடித்து கொண்டேன். அதில் எனது இடது உள்ளங்கையில் காயம் ஆனது. பின்பு 2 ம் எதிரி கல்லால் எனது தலையில் அடித்து நான் மயக்கம் அடைந்து கீழே விழுந்துவிட்டேன். அதனால் 1 ம் எதிரி என்னை இருந்தாலும் உங்களை கொள்ளாமல் விடமாட்டேன் டா என்று சொல்லி மிட்டிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். மற்ற எதிரிகளும் அங்கிருந்து ஓடி விட்டார்கள். பின்பு செல்வம், கந்தசாமி, பழனிசாமி ஆகியோர்கள் அங்கு வந்து எங்களை வாகனத்தில் ஏற்றி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். நாங்கள் முதலில் எடப்பாடி அரசு மருத்துவமனையில் முதல் உதவி பெற்று கொண்டு அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக சேலம் விநாயகா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு சுமார் 1 வாரத்திற்கு மேல் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். சம்பவம் தொடர்பாக போலீசார் என் அண்ணனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வழக்கு பதிவு செய்தார்கள். அந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் அரிவாளால் தான் 1 ம் எதிரி வெட்டினார். என்னிடம் காண்பிக்கப்படும் கருங்கல்லால் தான் 2 ம் எதிரி என்னை தாக்கினார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என் தாத்தா ஆண்டிகவுண்டர், 1 ம் எதிரியின் அப்பா குஞ்சப்பன், ஆண்டியப்பன் ஆகியோர்கள் சகோதரர்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு தலா 43 செண்ட் நிலம் உள்ளது என்றால் சரிதான். அந்த வகையில் என் தாத்தா மூலம் எங்களுக்கு 43 செண்ட் நிலம் வந்தது என்றால் சரிதான். எங்களுக்கு பிரித்துவிடப்பட்ட நிலத்தில் அவரவர்

பாகத்தில் விவசாயம் செய்து வருகிறோம். எதிரிகள் வீடு எங்கள் வீட்டில் இருந்து சுமார் 150 மீ தூரத்தில் உள்ளது. சம்பவத்தின் போது நான் வீட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல. என் வீட்டை ஒட்டி ஓலப்பாளையம் செல்லும் தார் ரோடு உள்ளது. அந்த தார் ரோட்டில் இருந்து கிழக்கே மண் ரோடு செல்கிறது என்றால் சரிதான். அந்த மண் ரோட்டிற்கு தெற்கில் காவேரி ஆறு உள்ளது. அந்த ரோட்டிற்கு மேற்புறம் எதிரிகளின் நிலம் உள்ளது. என் நிலத்திற்கு வடக்கில் என் நிலம் உள்ளது. அதற்கும் வடக்கில் எங்கள் நிலம் உள்ளது. எங்கள் நிலத்தில் 10 அடி ஆழத்திற்கு மண் அள்ளியுள்ளோம் என்றால் சரியல்ல. 3 அடிக்கு தான் அள்ளியுள்ளோம். அந்த வயல் முழுவதும் மண் அள்ளியுள்ளோம் என்றால் சரிதான். அந்த நிலத்தில் முள் புதராக உள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் மண் அள்ளி சுமார் 5 வருடம் இருக்கும். எதிரிகளின் நிலம் மேடாக உள்ளது என்றால் சரிதான். என் அண்ணன் அங்கு சென்று ஏன் மண் அள்ளுகிறீர்கள் என்று கேட்டதால் தான் பிரச்சனை என்றால் சரிதான். பேச்சின் போது எதேர்ச்சியாக தான் சண்டை நடந்தது என்றால் சரிதான். சம்பவ இடம் பட்டா நிலம் என்றால் சரிதான். என் நிலத்திற்கு வடக்கில் தான் சம்பவம் நடந்தது. சம்பவத்தின் போது என் அம்மா, அப்பா, அண்ணன் ஆகியோர்கள் தான் இருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் சண்டையை தடுக்கவில்லை. சம்பவம் சுமார் 11 மணிக்கு ஆரம்பித்து 2 மணி நேரம் நடந்திருக்கும் என்றால் சரியல்ல. என்னை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என்னை ஆம்னி காரில் அழைத்து சென்றார்கள் அது யாருக்கு சொந்தமானது என்று தெரியாது. சம்பவம் தொடர்ப்பாக என் அண்ணனோ, அண்ணியோ காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லவில்லை. எடப்பாடி மருத்துவமனைக்கு சென்ற போது நேரம் 10 மணி இருக்கும். அப்போது எனக்கு மயக்கம் தெளிந்துவிட்டது மருத்துவர் என்னை விசாரித்தார். அப்போது மருத்துவரிடம் என்னை கத்தியால் வெட்டியதாக தான் சொன்னேன் என்றால் சரிதான். என்னை போலீசார் அங்கு வந்து விசாரிக்கவில்லை. விநாயகா மிஷன் மருத்துவமனைக்கு 12 மணிக்கு சென்றேன். அங்கு போலீசார் என்னை 5 மணிக்கு விசாரித்தார்கள். என் அண்ணனை எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்று எனக்கு நேரடையாக தெரியாது. என்னை தேவூர் போலீசார் விசாரித்தார்கள். என்னிடம் வாக்குமூலத்தில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். சம்பவம் தொடர்பாக நான் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். சம்பவம் தொடர்பாக வேறு யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த மறுநாள் போலீசார் என்னை விசாரித்தார்கள். விசாரித்த போலீசார் பெயர் தெரியாது. மண் அள்ளும் போது JCB, டிரேக்டர் எதுவும் இல்லை. நான், என் அப்பா, அண்ணன் ஆகியோர் சேர்ந்து எதிரிகளை கடப்பாறை, கல்லால் தாக்கி அவர்களும் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றார்கள்

என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக 2 ம் எதிரி கொடுத்த புகார் பேரில் எங்கள் மீது குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக தான் மிகைபடுத்தி பொய் புகார் கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் மிகைபடுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தின் போது அணிந்திருந்த சட்டை, வேட்டி ஆகியவற்றை போலீசில் ஒப்படைத்துவிட்டேன் என்றால் சரிதான். நாங்கள் தான் எதிரிகள் நிலத்தில் அத்துமீறி நுழைந்து தகராறு செய்தோம் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் நிலத்தில் நுழைந்து தகராறு செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்குக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-கந்தசாமி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.